Regd. M. No. 4565

# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

மலர் 5 | மார்ச் 1945 | இதழ் 3.

ஆசிரியர் :

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.

உரிமையாளர் :

காரியக்கமிட்டியார் : சித்த மாணவர் கழகம்.
கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

Printed by P. Govindaraja Pillay at the Rudisill Press,
No 7, Nallanna Mudaly Street, Royapettah
and Published by C. M. Raja Jegatheesan,
at Govt. School of Indian Medicine, "Hyde Park"
Poonamallee High Road, Kilpauk, Madras

# தாளக மாத்திரை

(க. ராதாகிருஷ்ணன், எ.பி.)

சுத்திசெய்த ½ பலம் தாளகத்தை ஒரு மண்சேட்டில் வைத்து அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துவரும்போதும், இஞ்சிச்சாறு, முலைப்பால், தும்பை இலைச்சாறு, ஆக ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மணிநேரம் சுறுக்குக் கொடுத்து, இதனுடன் மொட்டு நீக்கிய கிராம்பு பலம் ¼, உயர்ந்த பால் பெருங்காயம் பலம் ¼ கூட்டிக் கல்வத்திலிட்டு இஞ்சிச்சாறு விட்டு ஒரு ஜாமம் அரைத்து சிறு பயறு பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திச் சீசாவில் பத்திரப் படுத்துக.

இதில் வேளைக்கு 1 மாத்திரை வீதம், தினம் 2 வேளை கம்மாறு வெற்றிலைச் சாற்றில் அனுபானம் செய்து குழந்தைகட்குக் கொடுக்க, இருமல், கபக்கட்டு, கப மாந்தம் முதலியனகுதீரும்.

பெரியவர்கட்கு வேளைக்கு 2-3 மாத்திரை வீதம், தினம் 2 வேளை கம்மாறு வெற்றிலையில் வைத்து மடித்து மென்று தின்னும் படி கொடுக்கலாம். இதனல் இருமல், சளி, ச்வாசகாசம் முதலியன தீரும். புளி தள்ளி இச்சாபத்தியமாக இருத்தல் நன்று.

# அயக் கருப்பு

சன்னமாக ராவிய அயத்தூளை வேண்டிய அளவு எடுத்து ஒரு பீங்கானில் போட்டு, விதை முற்றாத கருவேலம் பிஞ்சுகளை இடித்துப் பிழிந்த சாற்றை மூழ்கவிட்டுக் கலக்கி வைக்கவும். அதனை ஐந்தாறு மாதங்கள் வரையில் அப்படியே துப்பாகும்படி விட்டு வைத்துப் பிறகு கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்து மெல்லிய சீலையில் அரித்துத் திப்பியை நீக்கி மருந்தை சீசாவில் பத்திரப்படுத்துக. இது சுத்தக் கறுப்பாக இருக்கும். இதில் வேளைக்குக் குன்றி அளவு தினம் இரு வேளை வீதம் தேன் அல்லது நெய்யில் கொடுக்க எத்தகைய கடூரமான பெரும்பாடு ரோகமாயினும் குணமாகும்.

இச்சாபத்தியம், புளி நீக்கவும்.

# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 5 | மார்ச் 1945 | இதழ் 3


## பேதி மருந்து


கோ. துரைராசன்.


பேதிமருந்து என்னும் மொழி பேதிக்குத் தரும் மருந்து என விரியும். இங்ஙனம் கூறின் பேதியை நீக்குவதற்குத் தரும் மருந்தெனக் கொள்வதா? அல்லது பேதியை உண்டாக்குவதற்குத் (மலத்தைக் கழிப்பதற்குத்) தரும் மருந்தெனக் கொள்வதா? என்கிற ஐயந் தோன்றுகிறது. சுரமருந்து என்றால் சுரத்தை நீக்குவதற்குத் தரும் மருந்துஎன ஐயமின்றிப் பொருள் விளங்குகிறது. இங்ஙனமே பேதிமருந்து என்றாலும் கழிச்சலை நீக்கும் மருந்தெனப் பொருள் கொள்ளல்வேண்டும். ஆனால் பெரும்பாலோர் இங்ஙனம் கொள்ளாது கழிச்சலை உண்டாக்கும் மருந்தெனக் கொள்கின்றனர். ஆகவே நாமும் அவர்களின் கருத்தைத் தழுவி, மலத்தைக் கழிக்கும் மருந்தெனப் பொருள்கொண்டு ஈங்கு எழுதுவாம்.

ஒரு மொழியைக் கற்கவேண்டின் அதன் எழுத்துக்களை முதலில் கற்பதுபோல, ஒவ்வொரு மருத்துவனும் பேதிக்குக் கொடுக்கும் விதிகளை முதலில் கற்கவேண்டும். பண்டைக்காலத்து மக்களும் பேதிக்குக் கொடுக்க மருத்துவனுக்குத் திறமை உண்டா? என்பதை முதலில் கவனித்தனர். அத்திறமையைக் கண்ட பிறகுதான் அவனிடம் நோய்களுக்கு மருந்து கொள்வர். இன்றேல் அவனை மருத்துவன் என்று கொள்ளார். இது அவர்களது கொள்கை. உடற்கூறு, காலம், நோய், இவைகளைச் சரியாகக் கணித்துத் தக்க மருந்தை அல்லது பொருளைத் தேர்ந்து பேதிக்குக் கொடுக்கவேண்டும். முதலில் பேதிப் பொருள்களின் தன்மைகளைக் கூறுவாம்.

பேதியை யுண்டாக்கும் பொருள்களை மலமிளக்கி, மலம்போக்கி, நீர்மலப்போக்கி என மூன்று வகைகளாக வகுக்கப்பட்டுள்ளதைப் புதிய மருத்துவ நூல்களில் காணலாமே ஒழிய, பழைய தமிழ் நூல்களில் காணமுடியாது. இப்படி வகுத்துள்ளது பொருத்த மற்றதென்றே தோன்றுகிறது. ஏனெனின் அளவு படுத்திக்கொடுக்க ஒரு பொருளே இம்மூன்று செய்கைகளையும் செய்யக்கூடும். குறைந்த அளவில் கொடுக்க மலமிளக்கியாகவும், சற்று அதிக அளவில் கொடுக்க மலப்போக்கியாகவும், இன்னும் அதிக அளவில் கொடுக்க நீர்மலப்போக்கியாகவும் தொழிற்பரியும். அப்பொருள்கள் இவ்வகையில் பேதப்படாவிடினும், பேதியை யுண்டாக்கும் விதத்தில் பேதப்படுகின்றன.

I. சில பொருள்கள் குடலில் கனத்தை யுண்டாக்கி பேதியை யுண்டாக்கும்.

* a. கீரைகள், பூ, பழங்கள் முதலியவைகளிலுள்ள சில மட்கூறு பொருள்கள் செரிக்கப்படமாட்டா. அவை குடலில் சேர்ந்து கனத்தை யுண்டாக்கி பேதியை யுண்டாக்கும்.

* b. உப்புகள் சிறு, பெருங் குடல்களில் நீரை யதிகப்படுத்தி நீர் நீராக பேதியை யுண்டாக்கும்.

c. சிலபொருள்கள் நீரையுண்டு உப்பி கனத்தை யுண்டாக்கி மலத்தைக் கழிக்கும்.

II. சில பொருள்கள் வழவழப்பினுல் மலத்தை வெளிப்படுத்துவதாக அறியப்படுகிறது.

III. சில பொருள்கள் குடலை அற்பமாகவோ, தீவிரமாகவோ தூண்டி அதனுடைய இயக்கத்தை அதிகப்படுத்தி மலத்தை நீராகவே கழிக்கும்.

a. சிற்றாமணக்கெண்ணெய்:—இது சிறு குடலை அற்பமாகத் தூண்டி மூன்று அல்லது நான்கு மணிநேரத்தில் பேதியை யுண்டாக்கும். இதனைத் தனியாக உபயோகிக்கலாம். இது கெப்புத் தன்மையுடையது.

b. சூரத்து நிலாவாரை, இரேவல்சின்னி, சிவதை, மூசாம்பரம், முதலியன:—இவை பெருங்குடலைத் தூண்டி 7 முதல் 8 மணி நேரத்திற்குள் பேதியை யுண்டாக்கும். இவைகளை இரவில் கொடுப்பது நன்று என பேறுட்டு நூல்கள் கூறுகின்றன. இவை நீர்க்குண்டிக்காயையும் தூண்டும். இவைகளின்

---

* ப்ருதிவி, அப் இவ்விரண்டும் விசேஷமாகக் கலந்துள்ள திரவ்யம் பெரும்பாலும் கீழ்நோக்குந் தன்மையது, என அஷ்டாங்க ஹ்ருதயம் 9-வது அத்தியாயம் 11-வது செய்யுளில் கூறியதையும் கவனிக்க.

சத்து இரத்தத்தில் கலந்தால் கருப்பைச் சதை சுருங்கும். ஆகையால் கர்ப்பிணிகளுக்கு இவைகளைக் கொடுக்கக்கூடாது. இவைகளைக் குடிநீராகவும், சூரணமாகவும், இலேகியமாகவும் உபயோகிக்கலாம்.

c. ஆற்றுத்தும்மட்டி, நேர்வாளம், கள்ளிப்பால்:—இவை சிறு, பெருங்குடல்களைத் தீவிரமாகத் தூண்டி, 1 முதல் 4 மணி நேரத்தில் நீர்நீராக பேதியை யுண்டாக்கும். இவைகளையும் கர்ப்பிணிகளுக்கு உபயோகிக்கக் கூடாது. இவைகளை மாத்திரைகளாகவும், மெழுகாகவும், தைலமாகவும் உபயோகிக்கலாம். இவை வெப்ப வீரிய முடையவை.

d. பூரம்:—இருகுடல்களையும் அற்பமாகத் தூண்டி மலத்தைக் கழிக்கும். அற்பமாகத் தூண்டினும் வயிற்று வலியை உண்டாக்கும். இதனை மாத்திரை, தைலம், கட்டு முதலிய வைகளாக உபயோகிக்கலாம்.

குறிப்பு:—மேற்கூறிய ஒவ்வொரு பொருளையும் அதற்குரிய சுத்தியைச் செய்துதான் உபயோகிக்க வேண்டும்.

இனி அவைகளின் பயன்களையும், அவற்றின் உபயோக விதிகளையும் கூறுவாம்.

மலச்சிக்கல், மலபந்தம் இவைகளை நீக்கவும், குடலிலுள்ள பழைய மலத்தைக் கழித்துக் குடலைத் துப்புரவாக்கி, நல்ல பசியை யுண்டாக்கவும், நோய்களை அவைகளின் தொடக்கத்திலேயே (பூர்வரூபத்திலேயே) தடுத்து நோயின்றி வாழவும் பேதி மருந்துகள் கையாளப் படுகின்றன. அன்றியும் வாத நோய்களை நீக்க இவை சிறப்பாகக் கையாளப்படுகின்றன. இதனை "சத்தியால் பித்தம் தாழும், பேதியால் வாதந்தாழும், அஞ்சனத்தால் ஐயந்தாழும்" என்ற வாக்கியத்தால் அறிக.

முக்தேகிகளும் பேதிக்குக் கொள்ளலாம். வாததேகிகள் வெப்பவீரியம், உப்புச்சுவை, நெய்ப்புதன்மையுள்ள பேதிமருந்துகளையும், பித்ததேகிகள் துவர்ப்பு, இனிப்புச்சுவை உள்ளவைகளையும், கபதேகிகள் கார்ப்புச்சுவையுள்ளவைகளையும் கொள்ளல் வேண்டும். பித்ததேகிகளுக்கு வாளம் கலந்த பேதிகளை வழங்கலாகாது.

"ஆறுதிங்கட் கொருதடவை வமனமருந்தயில்வோம்
அடர்நான்கு மதிக்கொருகாற் பேதியுறை நுகர்வோம்"

என நோயணுகா விதியில் கூறப்பட்டு இருப்பதால் நான்கு திங்களுக் கொருமுறை பேதிக்குக் கொண்டால் நோய்கள் அணுகாவென உணரப்படுகிறது. முதுவேனிற்காலம், குளிர்காலம், பின்பனிக்காலம், இவற்றின் இறுதிகளிலோ அல்லது மழைக்காலம், முன்பனிக்காலம்,

இவைகளின் முதலிலோ பேதிக்கு அருந்தவேண்டும். குளிர்காலம் (சரத்ருது) பேதிக்குக் கொள்வதற்கு மிகவும் யுக்தகாலமென ஆயுர்வேத நூல்கள் கூறுகின்றன.

"குடிநீர் கற்கந்நை லங் கோடைக்காம் பேதி
கடுமாரி மூடுபனிக் கியாங்—கெடுமிவைகள்
சோபிக்கு மெக்களிக்குஞ் சூதமுப்பிற்கும் பேதி
சோபிக்கு மெக்காலுஞ் சொல்"

எனக் கூறியிருப்பதால் காலத்தை உணர்ந்து தக்க மருந்துகளைக் கொடுக்கவேண்டுமென அறிகிறோம். குடிநீர், கற்கம், நெய் (தைலம்) ரூபமாக உள்ள பேதிமருந்துகள் கோடைக்காலத்திற்கு ஏற்றவை என்றும், மாரி பனிக்காலங்களுக்கு ஏற்றவையல்லவென்றும் இச்செய்யுள் உணர்த்துகிறது. மழை, பனிக்காலங்களில் பசித்தீ அதிகப்படும். அப்பொழுது அம்மருந்துகள் சீரணிக்கப்பட்டு செவ்வையாய் பேதியை உண்டாக்கா. ஆகையால் அம்மருந்துகளும் அவைபோன்ற சூரணம், லேகியம், மணப்பாகு முதலியவைகளும் வேனிற்காலங்கட்கு நன்றேயொழிய மற்ற காலங்கட்கு ஏற்றவையாகா. மாரி, பனிக்காலங்களில் கொடுக்கவேண்டியவை எவையெனின் வாளம், கள்ளி வகைகளின் பால், சூதம், உப்பு இவைகளால் தயாரிக்கப்பட்ட பக்குவம், மாத்திரைகள், மெழுகுகள் இவைகளேயாம். இப்பேதிகளைக் கோடைகாலத்திலும் வழங்கலாமென மேற்கூறிய செய்யுள் கூறுகிறது. அக்காலத்தில் அவைகளைப் பன்னீர், சோம்புத்தீநீர் சோம்புக் குடிநீர் இவைகள் ஒன்றில் கலந்து கொடுப்பது நலம். அல்லது அப்பொருள்களைச் சிற்றாமணக்கு நெய் சேர்த்து நெய்யாக (தைலமாக) செய்து கொடுப்பது சிறந்தது. வெப்ப வீரியமுள்ள பொருள்கள் சேர்ந்திருப்பினும், இந்நெய்கள் மாரி, பனிக்காலங்களில் அவ்வளவு பயன்படா. மத்திப குணத்தையே பெறும். அக்காலங்களில் கட்டாயமாகக் கொடுக்கவேண்டின், சற்று வெதுப்பிக் கொடுத்தல் நன்று.

குன்மம், மூலம், கொப்புளங்கள், வங்கு, காமாலை, நாட்பட்ட சுரம், உதர நோய்கள், கிரிக்ரம விஷப்பற்று, வாந்தி, பிலீக நோய், அலிமுகம் என்னும் முதிர்ச்சி அடைந்த காமாலை, கட்டு கண் திமிரம், கண் காசம், கண் பூ, கண்ணீர் அருகல் என்னும் கண்ணோய்கள், பக்குவாசயத்தில் வலி, யோனி, ஆண்குறி, வித்து இவைகளைப்பற்றிய நோய்கள், குடல் கிருமிகள், விரணங்கள், மேல்நோக்கி வரும் வாத இரத்த வியாதிகள், சிறுநீர் அடைபடல், மலச்சிக்கல், குஷ்டம், பிரமேகம், அபசி, கிரந்தி, சூலை, யானைக்கால், உன்மத்தம், காசம், சுவாசம், இருதயத்தின் கோளாறு அடைந்த துடிப்பு, சிரங்கு, பால் தோஷம் முதலிய நோயாளிகளுக்கு பேதிக்குக் கொடுக்கலாம் எனவும், எழு நாட்களுக்கு அதிகப்படாத சுரம், அக்னிமாந்த முள்

ளவன், கிழுமொக்கும் இரத்த பித்த நோய் உள்ளவன், குதத்தில் அடிபட்டவன், அதிசார நோய், உடலில் உட்புகுந்த சல்லிய முள்ளவன், சிநேகவஸ்தி கொண்டவன், க்ரூர கோஷ்டம் (வாயு குடலில் அதிகரித்திருத்தல்) உள்ளவன் அதிக ஸ்நிக்த முள்ளவன், க்ஷயரோகஸ்தன், கர்ப்பிணி, ரூக்ஷதேக முள்ளவன், சிநேக சிகிச்சை கொள்ளாதவன், எப்பொழுதும் மனத்துயரம் உள்ளவன், பாலர் கிழவர், மெலிந்த திரேக முள்ளவர், அதிஸ்தூல நோயாளிகள், தமரக நோய் உள்ளவர், துர்பலன், க்ஷதகாசம், ஆமசுர முள்ளவன் இவர்களுக்கு பேதிக்கு கொடுக்கக் கூடாது எனவும் அஷ்டாங்க ஹ்ருதயம் முதலிய வடமொழி நூல்கள் கூறுகின்றன.

பேதிக்குக் கொள்ளத்தகாதவர் என்று சொல்லப்பட்ட பல நோயாளிகளுக்கு மலபந்தமிருப்பின் பேதிக்குக் கொடுப்பதை வழக்கில் காண்கிறோம். இவர்களுக்கு பேதியை வேகமாக உண்டாக்கும் நீர்மலப்போக்கி செய்கை உள்ள பேதி மருந்துகளை நீக்கி, சாந்தமாக மலத்தைக் கழிக்கும், மலப்போக்கி, மலமிளக்கி செய்கையுள்ள பேதி மருந்துகளை வழங்க வேண்டும். அதுவும் கர்ப்பிணிகளுக்குக் கருப் பையை நேர் முகமாகவோ, மறை முகமாகவோ, தூண்டிக் கருச் சிதைவை உண்டாக்கும் பொருள்கள், வாளம், கழற்சி, ஆத்துத்து மட்டி, கள்ளிப்பால், கரியபோளம். சிவதை, நிலாவிரை போன்றவை சேர்ந்த பேதி மருந்துகளை அறவே நீக்க வேண்டும். இவர்களுக்கு மலபந்தம் இல்லாமலிருப்பினும் ஐந்தாம் ஏழாம் ஒன்பதாம் திங்கள் களில் சிற்றாமணக்கு நெய் அல்லது அதனால் தயாரித்த மருந்தைக் கொடுப்பது வழக்கம். அதிமேக நோயாளிகளுக்கு வாளம் கலந்த பேதிகளை முற்றும் நீக்கவேண்டும்.

துர்பலனுக்கும், கோடங்கள் அதிகரித்தவனுக்கும், குடல் எவ் விதமானதென உரைப்படாதவனுக்கும் உணவாதிகளின் மூலமாகவே மலத்தைக் கழிக்க வேண்டும். அல்லது குறைந்த அளவில் பேதி மருந்தை யடிக்கடிக் கொடுக்க வேண்டும். பசித்தீ மந்தப்பட்டுள்ள வருக்கும், குடலில் வாயு அதிகரித்தவருக்கும் க்ஷாரம் உப்பு இவை சேர்ந்து செய்த நெய்களை முதலில் வழங்கிப் பசித்தீயை யதிகப் படுத்திக் கப வாதங்களைக் குறைத்துப் பிறகு பேதிக்குக் கொடுக்க வேண்டும். வறட்சி தேகமுடையவர்களுக்கும் தேகப்பயிற்சி செய்ப வர்களுக்கும், அதிக பசியுள்ளவர்களுக்கும் முதலில் வஸ்தி செய் வித்துப் பிறகு நெய்ப் பேதிக்குக் கொடுக்க வேண்டும். பித்தம் குட லில் அதிகரித்திருந்தால் வெறும் பால் அல்லது நிசிநீரைக் குடிக்க பேதியாகும்.

அதிசாரமுள்ளவர்களுக்கும், அதிகம் மெலிந்தவர்களுக்கும், குதத்தில் அல்லது வயிற்றில் காயம் பட்டவர்களுக்கும், குடல் முறுக் குண்டு துன்படுகிறவர்களுக்கும் எவ்வித பேதிக்கும் கொடுக்கக் கூடாது.

சில நோய்களுக்குப் பேதிக்குக் கொடுக்கலாம் என்று கூறியிருப் பினும் அந்தந்த நோய்களுக்குத் தக்க பொருள்களைச் சேர்த்துச் செய்த பேதிமருந்துகளையே அந்தந்த நோய்களுக்குக் கொடுத்தல் வேண்டும். உதாரணமாகக் கலிங்கம் சேர்ந்த மருந்தைக் கருப்பை பற்றிய நோய்களுக்கும், கழற்சிக்காயைப் பீஜங்களின் சம்பந்தமான நோய்களுக்கும், இரசம், இரச சம்பந்தபட்டவைகளை மேக நோய் களுக்கும், உப்புகளை சோபை, பாண்டுகளுக்கும் என்பதுபோலாம்.

எண்ணெய் முழுக்குச் செய்த மறுநாள் காலையில் கிழக்குமுகம் திரும்பி உட்கார்ந்து பேதிமருந்தை யுட்கொள்ள வேண்டும். மருந் தின் ஓக்காலத்தை நீக்கும் பொருட்டுக் கொட்டைப் பாக்குச் சீவல், திராக்ஷை பழம் (வற்றல்), வெற்றிலைக்காம்பு, பழைய நெல்லின் பொரி இவைகளில் ஒன்றை வாயிலிட்டு மெல்லலாம். மனத்துயர முள்ள வர், சிரங்குள்ளவர், காமாலை பாண்டுரோகிகள், நஞ்சுண்டவர்கள் காயம்பட்டவர்கள், மற்றும் எண்ணெய் முழுக்கு எடுக்கத்தகாத நோயாளிகள் யாவரும் எண்ணெய் முழுக்கின்றியே பேதிக்கு அருந் தலாம்.

பத்துமுறை மலங்கழிந்தால் ஹீநவேக மென்றும், இருபது முறை மலங்கழிந்தால் மத்திமவேக மென்றும், முப்பதுமுறை மலங் கழிந்தால் உத்தமவேக மென்றும் வடநூல்கள் கூறுகின்றன. இங் ஙனம் கணக்கிடும்போது மலமாகக் கழியும் வேகங்களை நீக்கி அதாவது முதல் இரண்டு மூன்றுகளை நீக்கிப் பிறகு ஆகும் நீர்கழிச்சலையே கணக்கிடவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நமது நாட்டில் அவ்வளவுதரம் பேதியானால் ஒருவரும் தாளார். ஆகையால் பத்து பன்னிரண்டுமுறை நீர்நீராகக் கழிவதை உத்தமமென்றும் ஐந்து ஆறு முறை கழிவதை மத்திபமென்றும் இரண்டு மூன்று முறை கழிவதை அதமமென்றும் கொள்ளலாம். முதலில் மலமும் பின் நீராகப் பித்தமும், வாயுவும் கிரமமாக வெளிப்படும். பின்பு கப பித்தங்களுடைய சம்பந்தமில்லாத நீர்பொருள் வெளியாம். பிறகு சிதஞ் சிதமாக கழியும், அல்லது குடித்த நெய் (தைலம்) வெளிப்படும். இதுவே பேதியின் இறுதியை யுணர்த்தும்.

(தொடரும்)